செ.வெ.எண் 119 நாள் 29.04.2016

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1,34,695 புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்

## மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான திருமதி இரா.கஜலட்சுமி, இ.ஆ.ப. அவர்கள் தகவல்

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 20.01.2016 அன்று சிறப்பு சுருக்கமுறைத் திருத்த வக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. பொதுமக்கள் வாக்காளர் பட்டியலை சரிபார்த்துக் கொள்ளவும், சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ள நேரடியாகவும், ஆன்லைன் மூலமாகவும் விண்ணப்பிக்க கடந்த 20.01.2016 முதல் 19.04.2016 வரை கால அவகாசம் அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இன்று (29.04.2016) காஞ்சிபுரம் மாவட்டத்தின் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இப்பட்டியலின்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தின் 11 சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 36,39,491 ஆகும். இவற்றில் 18,02,429 ஆண் வாக்காளர்களும், 18,36,780 பெண் வாக்காளர்களும், 282 மூன்றாம் பாலின வாக்காளர்களும் அடங்குவர்.

இப்பட்டியலில் 59,128 ஆண்களும், 75,526 பெண்களும், 41 மூன்றாம் பாலினத்தவர்களும் ஆக மொத்தம் 1,34,695 வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். 2,794 ஆண் வாக்காளர்களும், 2,355 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலின வாக்காளர்களும் ஆக மொத்தம் 5,156 வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 36,39,491 வாக்காளர்களும் வாக்களிக்க ஏதுவாக 11 சட்டமன்றத் தொகுதிகளில் 3,973 வாக்குச் சாவடிகளும், 30 துணை வாக்குச் சாவடிகளும் ஆக மொத்தம் 4,003 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன என மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான திருமதி இரா.கஜலட்சுமி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.